# சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் (Service Brampton) சாளரங்களில் போகிற போக்கில் நேரடி சேவை பெறும் புதிய வசதியை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் விரிவுபடுத்த உள்ளது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 28, 2022) – ஜூன் 28 ஆகிய இன்றைய தினம் துவங்கி, சேவ் மேக்ஸ் ஸ்போர்ட்ஸ் மையத்தில் (Save Max Sports Centre) போகிறபோக்கில் நேரில் வந்திருந்து பெறும் புதிய சேவையை அறிமுகம் செய்வதுடன், கேஸ்ஸி கேம்ப்பெல் சமுதாயக் கூடம் (Cassie Campbell Community Centre) மற்றும் கோர் மெடோஸ் சமுதாயக் கூடம் (Gore Meadows Community Centre) ஆகியவற்றில் பணி நேரங்களையும் சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் (Service Brampton) விரிவுபடுத்துகிறது.

நகரைப் பற்றிய தகவல்கள் மற்றும் சேவைகளை ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் எளிதாக அணுகுவதற்கான வழியை சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் சாளரங்கள் வழங்குகின்றன. குடியிருப்புவாசிகள் தங்களுக்கான சேவைகளுக்கு வேண்டுகோள் விடுத்து பல பரிவர்த்தனைகளையும் நிறைவேற்றிக்கொள்ள சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் அமைந்துள்ள இடங்களுக்கு தங்கள் வசதிப்படி செல்லலாம்; இதன்படி, பொழுதுபோக்கிற்காக பதிவு செய்தல், வாகன நிறுத்தக் கட்டணம் செலுத்துதல் மற்றும் ரொக்கம் அல்லாத முறையில் வரி செலுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ளலாம். இந்த இடங்கள் அனைத்திலும் கிரெடிட் கார்டுகள், டெபிட் கார்டுகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

சூஸன் ஃபென்னல் ஸ்போர்ட்ஸ்பெக்ஸ் (Susan Fennell Sportspex) -இல் இருக்கின்ற தற்காலிக போகிறபோக்கிலான நேரடி வசதி சாளரமானது ஜூன் 27, 2022 தேதியில் மூடப்படும், என்றாலும் நகர் மன்றம் மற்றும் ப்ராம்ப்ட்டன் சிவிக் மையம் ஆகியவற்றில் அமைந்துள்ள சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் சாளரங்களுக்கு குடியிருப்புவாசிகள் வருகை புரியலாம். பணி நேரங்களை இங்கு பார்க்கலாம்: www.brampton.ca/contactus.

புதிய, போகிறபோக்கில் நேரில் வந்திருந்து பெறும் சேவைக்கான தற்காலிக விரிவாக்கமானது 2022 ஆண்டு இறுதி வரை பயன்பாட்டில் இருந்து வரும். இதனைத் தொடர்ந்து, ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகளுக்கான வாடிக்கையாளர் சேவை அனுபவத்தை தாங்கள் மேம்படுத்தியிருப்பதாக நகரப் பணியாளர்கள் உணர்ந்து, இந்த அமைவிடங்களை நிரந்தரமாக விரிவுபடுத்துவதற்கான தேவை இருக்குமா என்றும் தெரிந்தபின், அவர்கள் முடிவு மேற்கொள்ளுவார்கள்.

சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் சேவையை ஒரு நாளின் 24 மணி நேரமும், வாரத்தின் 7 நாட்களும் பெறுவதற்காக கீழ்க்காணும் நான்கு வழிகள் உள்ளன:

- ஆன்லைனில் சேவை பெறுவதற்கான செயலி: 311Brampton.ca
- 311 Brampton செயலியை App Store அல்லது Google Play யில் பதிவிறக்கம் செய்யவும்
- ப்ராம்ப்ட்டன் நகர எல்லைக்குள்ளாக 311 என்ற எண்ணை சுழற்றவும் (நகர எல்லைக்கு வெளியில் 905.874.2000)
- மின்னஞ்சல் செய்ய: 311@brampton.ca

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca